REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 25உ வியாழன் (7—2—57) ★ ★ வெளியீடு: தை 26உ வெள்ளி (8—2—57) [இதழ் 207

10 நாளைக்கு முன்புகூட போட்டியிலிருந்து விலகிக்கொள்ளலாம்

பம்பாய், பிப். 6—

வாக்குப்பதிவு தினத்திற்கு 10 நாளைக்கு முன்புகூட ஒரு அபேட்சகர் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளலாம். அவருக்காக ஓட்டுப் பெட்டி வைக்கப்படமாட்டாது; ஆனல், அபேட்சகருக்கு 'டிபாசிட்' பணம் கிடைக்காது.

இது இப்போதைய தேர்தல் விதிகளில் ஒன்று; புதிதாக இந்த இரண்டாவது தேர்தலின்போது தேர்தல் குழுவால் அமுல் செய்யப்படுகிறது.

'தி. மு. கழக அபேட்சகர்களுக்கே வாக்களியுங்கள்'

தாயகத்தோருக்கு வட நாட்டில் குடியேறியுள்ள தமிழர் வேண்டுகோள்

உற்ருர்-நண்பர்களுக்குக் கடிதங்கள் விரைகின்றன

ஆமதாபாத் கழகத் தோழர்களின் முன்மாதிரியான முயற்சி

நாட்டில் காங்கிரஸ் ஆட்சியினுல் ஏற்பட்ட கொடுமைகளையும் அலங்கோலங்களையும் சுட்டிக்காட்டி, நிலவிவரும் இழிநிலை போக்க—உழைப்போர் உயர்வுபெற வேண்டுமென்ற உயரிய நோக்குடன் தேர்தலில் ஈடுபட இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு வடநாட்டிலிருக்கும் தமிழகத் தோழர்கள் —நாட்டின் மீது அக்கரை கொண்ட கழகத் தோழர்கள், தாய்த் தமிழகத்திலுள்ள தங்களுடைய உற்ருர், உறவினர், நண்பர்கள், சுற்றத்தார் அனைவருக்கும் கடிதங்கள் எழுதுகிருர்கள்.

வடநாட்டில்—ஆமதாபாத்தில் இயங்கிவரும் தி. மு. கழகக் கிளையினர் 'உங்கள வாக்கு உதய சூரியனுக்கே; தி. மு. கழகத்தினர்க்கே' என்று தலைப்பிட்டு, அஞ்சல் கார்டுகளில் இதனை அச்சடித்து, தமிழகத்திலிருக்கும் தங்கள் நண்பர்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

வடநாட்டில் குடியேறியுள்ள தமிழர்கள், தாயகத்தில் உள்ள தங்களுடைய உறவினர்களுக்கு கடிதங்கள் மூலம், தி. மு. கழக அபேட்சகர்களுக்கே வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த இயக்கத்தை நடத்தும், ஆமதாபாத் தி. மு. க. தோழர்கள் நம்முடைய பாராட்டுதலுக்குரியவர். அவர்களது முன்மாதிரியான நடவடிக்கை நமக்கு மகிழ்ச்சி தருகிறது.

★-★★★★★★★★★★★★★★★★-★

சென்னை—சட்டசபை

செங்கற்பட்டு

தனித் தொகுதிக்கு

தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவர் தோழர் எ. இரத்தினம் அவர்களுக்கு தி. மு. கழகம் ஆதரவு அளித்திருக்கிறது.

தலைமைக் கழகம் (தி மு. க.)

✱-✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱-✱

இந்திய இராணுவம்

திருத்தி அமைக்கப்படவேண்டும்

ஜுகாவ் யோசனை

உதகை, பிப். 6—

"இந்தியாவின் இராணுவம், வெள்ளையர் காலத்தில், 'பிரிட்டிஷ் மாதிரி'யில் உருவாக்கப்பட்டது என்பதால், இப்போது நாட்டின் தேவைகளை ஒட்டி இந்திய இராணுவத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்" என்று ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ், இங்கு கருத்தறிவித்திருக்கிருர்.

தமிழ்நாடு காங்கிரஸ் 'கோஷ்டி'ச் சண்டை

'சீர்திருத்தக் கட்சி'யினர் மீது நடவடிக்கையாம்

சென்னை, பிப். 6—

அதிகாரபூர்வமான காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவதற்காகவும், நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதற்காகவும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி 59 பேர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாம்.

'பேரிகை' ஆசிரியர் எஸ். எஸ் மாரிசாமி, காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சித் தலைவர் கே எஸ். வெங்கடகிருஷ்ண ரெட்டியார் ஆகியோர் உட்பட 59 பேர்கள், கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கின்றனராம்.

ஒரு இலட்சம் தொழிலாளர்

வேலை நிறுத்தம்

போனஸ் தரப்படாததற்கு எதிர்ப்பு

மூணூறு, பிப் 7—

தேவிகுளம்—பீர்மேடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1955—56-ம் ஆண்டுக்கான 'போனஸ்' கொடுக்கப்படாததையொட்டி இத்தோட்டங்களில் வேலை செய்யும் சுமார் 1,00,000 தொழிலாளர்களும் இன்று அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டிருக்கின்றனர்.

அதைத்தானே நாமும் கூறுகிறேம்!

"வாக்காளர்கள் காங்கிரசின் சாதனைகளை எண்ணிப் பார்த்து, தேர்தலில் தீர்ப்பளிக்கவேண்டும்"

என்று, பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் பவாகர் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டதாகச் செய்தி ஒன்று வந்துள்ளது.

மக்கள் சபை

நாமக்கல்

தனித் தொகுதிக்கு

★

டி. வி. சுந்தரராசன்

தி. மு. கழக அபேட்சகராக நிறுத்தப்பட்டிருக்கிருர்

—தலைமைக் கழகம் (தி மு க.)

எல். ஜி. தாட்டே கைது!

அலகாபாத், பிப். 6—

அலகாபாத்தில் நடைபெற்றக் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் நேரு பேசிக்கொண்டிருந்தபோது, ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் என்ற காரணத்திற்காக அகில இந்திய இந்து ராஜ்யக் கட்சியின் பொதுச்செயலாளரான எல். ஜி. தாட்டே கைது செய்யப்பட்டிருக்கிருராம்.

★★★★★★-★★★★★★★★-★★★★

அறிவிப்பு

9—2—57 சனி (வெளியீடு 10—2—57) 'நம்நாடு' இதழில் சென்னை சட்டசபை, பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்கள், கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களின் முழுப் பட்டியலும் வெளியிடப்படும்.

✱✱✱✱✱✱✱✱✱✱-✱✱✱✱-✱✱✱✱

ஒரு வாரத்தில் 700 பேர் படுகொலை

அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரர்கள் கொலைத் தொழில்

அல்ஜீயர்ஸ், பிப். 6—

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுதலை கோரி எழுந்து நிற்கும் அல்ஜீரிய மக்களை, தினந்தோறும் நூற்றுக் கணக்கில் கொன்று குவிக்கும் கொலைத் தொழிலை, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தீவிரமாக்கியிருக்கின்றனர்.

700 பேர் படுகொலை

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 700 தேசியவாதிகளைச் சுட்டுக் கொன்றனராம், பிரெஞ்சு இராணுவத்தினர்!

ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் அவர்கள் வேட்டையாடிவரும் அல்ஜீரியர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் சென்றுக்கொண்டிருக்கிறது.

கடந்த 1954 நவம்பர் முதல் தேதியிலிருந்து இன்றுவரை சுமார் 20,000 அல்ஜீரியர்களை பிரெஞ்சு இராணுவத்தினர் கொன்றுகுவித்ததாகக் கூறப்படுகிறது.

★

'சண்டையை நிறுத்த ஐ. நா. செயலாளர் உதவ வேண்டும்'

நியூயார்க், பிப். 5—

"அல்ஜீரியாவில், தேசியவாதிகளுககும் பிரெஞ்சு இராணுவத்தினருக்குமிடையில்நடைபெறும் கடுமையான சண்டையைத் நிறுத்துவதற்கு அல்ஜீரிய மக்களும், பிரெஞ்சு சர்க்காரும் உடனடியாகப் பேச்சுவார்த்தை துவங்க வேண்டும்; இதற்கு ஐ. நா. செயலாளர் உதவ வேண்டும்"

என்று, ஐ நா. பொதுச் சபையின் அரசியல் கமிட்டியில், 18 ஆப்பிரிக்க—ஆசிய நாடுகள் சமர்ப்பித்துள்ள தீர்மானம் கோருகிறது.

இணங்குக!

"அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளவேண்டும் என்ற அல்ஜீரிய மக்களின் விருப்பத்திற்கு பிரான்ஸ் இணங்கவேண்டும்" என்றும் தீர்மானம் கூறுகிறது.

★★★★-★★★★★★★★★★-★★★★

சென்னை சட்டசபைத் தேர்தல்

திருவையாறு

தொகுதிக்கு

தி. மு. கழக அபேட்சகராக

பட்சிராசன்

நிறுத்தப்பட்டிருக்கிருர்

—தலைமைக் கழகம் (தி. மு. க)

✱✱✱✱✱✱✱-✱✱✱✱✱✱-✱✱✱✱

சென்னை மாநிலத்தில் 20,000 வாக்குப் பதிவுச் சாவடிகள்

சென்னை, பிப். 7—

பொதுத் தேர்தலின்போது சென்னை மாநிலத்தில் மொத்தம் 22,000 வாக்குப் பதிவுச் சாவடிகள் இருக்குமாம்!

2-இலட்சத்திற்கும் மேற்பட்ட தேர்தல் அதிகாரிகள் இவ்வாக்குப் பதிவுச் சாவடிகளில் பணியாற்றுவர் என்றும், ஒவ்வொரு சாவடியிலும் 7 அல்லது 8 அதிகாரிகள் இருப்பரென்றும் தெரியவருகிறது.

இலஞ்ச ஊழல் புரிந்த காங்கிரசார் தேர்தலில் போட்டியிடுகின்றனர்

அவர்களை அகாலி தளத்தவர் எதிர்ப்பர்

இலஞ்ச ஊழல் புரிந்தவர்கள் என்று தாம் குற்றம் சாட்டிய காங்கிரசாருக்கு மேலிடம் தேர்தலில் போட்டியிட அனுமதி தந்திருப்பதால் அவர்களை எதிர்த்து, தானும், இன்னும் சில அகாலிகளும் போட்டியிடப் போவதாக அகாலி தலைவர் மாஸ்டர் தாரா சிங் தெரிவித்திருக்கிருர்.

கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இலஞ்ச ஊழல் காங்கிரசாரை எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகர் பெயர்கள் இன்னும் இரண்டொரு நாளில் வெளியாகும் என்றும் தெரிவித்திருக்கிருர்.

மீண்டும் ஆரம்பம்?

பிப். 15-ம் தேதி முதல் சூயஸ் கால்வாயில் சிலவகைக் கப்பல்கள் போக்குவரத்து ஆரம்பமாகக் கூடுமாம்.

தமிழ்ப் பெருமக்களே! வாக்காளரே!

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7-2-'57 வியாழன்

கேட்டுப் பாருங்கள்!

சமுதாய முன்னேற்றப் பாதையில் தொழில் ஏற்பாடு ஒரு கட்டமாகும். அத்தகு தொழில் ஆக்கத்திற்கு உள்ளாக்கப்படாத எந்தச் சமுதாயமும், அச்சமுதாயம் வாழ்ந்து வரும் எந்தப் பகுதியும் மேலும் மேலும் வளம்பெற்று வாழ்ந்து வருவது என்பதும் கற்பனைக்கும் எட்டாத ஒன்றாகும்.

காலாகாலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெறத் தவறிவிடுகின்ற சமுதாயமும், அச்சமுதாயத்தைக் கொண்டுள்ள நிலப் பகுதியும், வேகமாக வளர்ந்துவரும் உலக முன்னேற்றத்தில் ஒத்து நடைபோட முடியாது. அந்த நிலப் பரப்பும் அதில் வாழும் மக்கள் கூட்டமும், உலக முன்னேற்றப் பாதையிலிருந்து பல நூற்றாண்டுக் காலம் பின்னேக்கித் தேங்கி நின்றுவிடும். எனவே, அதன் வளர்ச்சி எல்லாவகையிலும் குன்றிப் போகும். காலப் போக்கில், அச்சமுதாயமும் அது வாழ்ந்த நிலப்பரப்பும் பற்றிய பெருமைகள் அனைத்தும், வரலாற்று ஏட்டளவுடன் அடங்கிக் கிடக்கவேண்டியதாகிவிடும்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இருநூறு ஆண்டுக்கால ஆட்சியில் நமது தென்னகம், அதற்குரிய தொழில் வளர்ச்சியைப் பெறத் தவறிவிட்டது. அதன் நேரடி விளைவாக இங்குள்ளாரை ஏழ்மையும், இல்லாமையும், கொடும் பஞ்சமும் அச்சுறுத்தி அழித்து வந்திருக்கின்றன. பத்தாண்டுக்கால காங்கிரசாட்சியிலும் இங்குள்ள நிலை அதுவேதான். அத்துடன், தங்கள் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் இழந்துவிட்டிருக்கின்றனர் இங்குள்ளவர்.

இவ்வளவிற்கும் இயற்கை வளமற்ற நிலப்பரப்பாக நாம் வாழ்ந்துவரும் தென்னகம் இருந்திடவில்லை. பன்னெடுங் காலமாக, பலவகையான இயற்கைச் செல்வம் நமது நிலப் பரப்பில் நிரம்பி இருக்கத்தான் செய்கின்றன. இங்கு பல்வகையான இயற்கைச் செல்வம் தேவைக்கதிகமான அளவில் இருந்தும்கூட, இங்குள்ள நம் மக்கள், இன்றும் கொல் வறுமைக்கும் வேலையற்ற சோம்பலுக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடக்கின்றனர்.

ஏன் இந்த அவல நிலை?

நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்துவதில் ஏன் இந்தத் தாமதம்?

சேலத்து இரும்புக்கனியைத் தோண்டி எடுத்துத் தொழில் படுத்துவதற்கான உருக்குத் தொழிற்சாலை இதுவரை துவங்கப்படாதது ஏன்?

அப்பகுதியில் கிடைக்கும் பாக்சைட்டைக்கொண்டு அலுமினியத் தொழிற்சாலையை, ஏன் இப்பொழுதும் உடனடியாகத் துவங்க முன்வரவில்லை?

காவேரி வட்ட எண்ணெயைப் பயன்படுத்துவதற்குரிய ஏற்பாட்டை எட்டளவிலாவது இன்னும் நீட்ட முன்வராதது ஏன்?

தமிழ் நாட்டிற்குத் தேவைப்படக்கூடிய அளவிற்கும் கூடுதலாக இங்குள்ள தொழிற்சாலைகளில் சிமெண்ட் உற்பத்தி இருந்தும்கூட, அரசாங்க வேலைகளுக்கே சிமெண்ட் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை ஏன் இருக்கவேண்டும்? இதற்கு எவர் பொறுப்பாளி?

இவைகளையும் இதுபோன்ற பல கேள்விகளையும், தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொண்டு விடை காணத் தமிழ் நாட்டு மக்கள் முயற்சிக்க வேண்டும்.

அத்தகைய முயற்சிக்கு, வரவிருக்கும் பொதுத் தேர்தல் ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகும்.

பூமிக்கடியில், தேவையான அளவு இரும்புக்கனிப் பொருள் இருக்கிறது. இருந்தாலும் அதைப் பயன்படுபொருளாக மாற்றி அமைக்க, இங்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை இன்றுவரை துவங்கப்படாமல் இருக்கிறது—இந்த அலட்சியம் ஏன்? பத்தாண்டு காங்கிரசு ஆட்சி நடைபெற்றுங்கூட, இதற்கு விமோசனம் ஏன் ஏற்படவில்லை? இது பற்றி, காங்கள் இதுவரை எடுத்துக் கொண்ட முயற்சி என்ன என்று, இப்பகுதியில் நாடாண்டு கொண்டு இருக்கும் பச்சைத் தமிழர் ஆட்சியை, இந்தத் தேர்தல் நேரத்தில் கேட்கத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

காங்கிரசுக் கட்சி பதவியில் அமர்ந்து பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகும்கூட, நெய்வேலி நிலக்கரி பூமிக்கடியிலேயே நீரில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டும் காலத்தைக் கழித்து வந்தது நியாயமாகுமா என்று, கனம் காமராசரை, இந்தத் தேர்தல் நேரத்தில்தான் தமிழ் மக்களால் கேட்பது சாத்தியமாகும். இப்பொழுது கேட்கத் தவறிவிடும் பட்சத்தில் இன்னும் ஒரு ஐந்தாண்டுக் காலம் கழித்துத்தான், தமிழ் மக்கள் அந்த நல்லவரை மீண்டும் நேரில் காண்பது சாத்தியமாகும்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட நஷ்டம்

"இந்தியா முழுமையிலும் 1956-ல், வெள்ளத்தினால் பயிர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 42 கோடிக்கு மேல் இருக்கும் என்று அதிகாரபூர்வமாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களுக்கு ரூ 3,12,00,000 மானியமாகவும், ரூ. 9 கோடி கடனாகவும் இந்தியப் பேரரசு உதவியிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் ஏற்பட்ட நஷ்டம் ரூ 47,540 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; எனவே ரூ 15,000 மானியமாகவும், வீடு கட்டிக்கொள்ளவும் தானியம் வாங்கவும் ரூ. 5 600 கடனாகவும் மத்திய அரசாங்கம் உதவியிருக்கிறதாம்.

தபால் மூலம் வாக்குப் பதிவு

வாக்குப் பதிவு நிலைய ஊழியர்களுக்கு வசதி

பொதுத் தேர்தலின்போது வாக்குப் பதிவு நிலையங்களில் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படும் அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரும் தங்கள் வாக்குகளை நேரில் தங்கள் தங்கள் தொகுதி பதிவு நிலையங்களுக்குச் சென்று பதிவு செய்ய முடியாததால், அவர்களுக்கு மட்டும், தபால் மூலமே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து வசதி அளிக்கும் வகையில் தேர்தல் குழு விதி ஒன்று நிர்ணயித்திருக்கிறது

தேசாய் சொன்னதும் சொல்ல மறந்ததும்!

'தேர்தல்கள், மாணவர்களுக்கு, ஆண்டு இறுதியில் நடைபெறும் தேர்வுகளைப் போன்றவை. வருட முழுவதும் கவலையற்றிருந்துவிட்டு கடைசி நேரத்தில் பாடங்களைப் புரட்டும் மாணவர்கள், பரீட்சையில் வெற்றி பெறுவது நிச்சயமில்லை; எனவே, காங்கிரஸ் ஊழியர்கள் தேர்தல் நேரத்தில் மட்டுமின்றி ஆண்டு முழுவதும் வேலை செய்ய வேண்டும்"

என்று, அகமதாபாத்தில் பேசிய மொரார்ஜி தேசாய் சொன்னாராம்.

ஆனால் அவர் சொல்ல மறந்தது, 'மார்க்' போடவேண்டியவர்கள் மக்கள்தான்; இந்த முறை, மக்கள் காங்கிரசுக்கு நியாயமாக 'சுழி சுழி' யாகத்தான் 'மார்க்' போடுவார்கள்—நியாயமாக நடந்துகொள்வதானால் என்பது!

2 கோடி பவுன் விலையில் 66 விமானங்கள்

பிரிட்டனிடம் இந்திய சர்க்கார் வாங்குவதற்கு ஒப்பந்தமாம்!

லண்டன், பிப். 6—

மூன்றாண்டு கால பேச்சு வார்த்தைக்குப் பிறகு 66 'கான்பெர்ரா' ஜெட் விமானங்களை வாங்குவதற்கு இந்தியா ஏற்பாடு செய்திருக்கும் செய்தி அம்பலமாகியிருக்கிறது.

பிரிட்டிஷ் இராணுவ விமானங்களுக்கு இவ்வளவு பெருத்த அளவில் ஆர்டர் இதுவரையில் கொடுக்கப்பட்டதில்லை என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவிக்கின்றனவாம்;

2 கோடி பவுன் விலையாம்!

உதிரி பாகங்கள் உள்பட இந்த 66 ஜெட் விமானங்களும் 200 இலட்சம் பவுன் விலை பெறக்கூடுமாம்!

இந்த விமானங்கள் இந்த வசந்தம் அல்லது கோடையிலிருந்தே இந்தியாவுக்கு அனுப்பப்படக்கூடுமெனத் தெரிகிறது.

ரஷ்யாவிடம் ஏன் வாங்கவில்லை?

ரஷ்யாவின் 'இல்யுஷின்ஸ்' விமானங்களை வாங்காமல் இந்தியா 'கான்பெர்ரா' விமானங்களை வாங்குவது பற்றி முக்கியத்துவம் தரப்படுகிறது.

சென்ற வாரம் வரையில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லையாம்! ஒப்பந்தம் முடிவடைய இவ்வளவு தாமதமானதற்குக் காரணம், ரஷ்யா தன் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முயன்றதுதானாம்!

தங்களுக்கே இந்த விமான பேரம் கிடைக்கவேண்டும் என்ற நினைப்புடன், நேருவுக்கு ஒரு 'இல்யுஷின்' விமானத்தை இனாமாகக்கூடக் கொடுத்துப் பார்த்தார்கள்! இதுமட்டுமல்லாமல் 2 50 000 பவுன் விலையுள்ள 'கான்பெர்ரா' விமானங்களுக்கு ஏறக்குறைய சமமாக இருக்கும் 'இல்யுஷின் வெடிகுண்டு' விமானங்களையும் குறைந்த விலையில் 60,000 பவுன்களுக்குக் கூட விற்கத் துணிந்தார்கள்!

தேர்தல் அதிகாரிகள் பாரபட்சம் இன்றி நடந்துகொள்ள வேண்டும்

அபேட்சகர்கள் கண்ணியமுடன் நடந்துகொள்ள வேண்டும்

புதுடில்லி பிப். 5—

தேர்தல் காலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், அங்கீகரிக்கப்படாத கட்சிகளுமாக அனைவரும் ஒத்துழைப்பு தரவேண்டியதின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி தேர்தல் குழு, அறிக்கையொன்று விடுத்திருக்கிறது. தேர்தல்களின்போது தில்லுமுல்லுகளும் குற்றங்களும் நடைபெறாதவாறு கட்சிகள் அனைத்தும் கண்காணித்துக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின்போது எதிர் அபேட்சகர் அல்லது எதிர்க்கட்சியினரின் தொல்லைகள், வாக்காளருக்கு இலட்சம் கொடுத்தல், பதிவு நிலையங்களுக்கு 100 கெஜத்திற்கு உள்ளாக ஓட்டுச் சேகரித்தல், வாக்குப் பதிவுக்காக வாக்காளர்களை அபேட்சகர் வீடுகளிலிருந்து அழைத்து வந்து மறுபடியும் கொண்டுவிடுவது—இப்படிப்பட்ட பல நடவடிக்கைகளையும் தவிர்க்கவே தேர்தல் குழு மேற்கண்ட வேண்டுகோள் மூலம் எல்லா கட்சியினரின் ஒத்துழைப்பையும் நாடுகிறது.

இவைகள் பற்றி ஒவ்வொரு கட்சியும் தங்கள் தங்கள் அபேட்சகர்களுக்குத் தகுந்த முறையில் விளக்கங்கள் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே, மாநில சர்க்கார்களும், தங்கள் தங்கள் மாநிலங்களில் தேர்தல் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களும் எந்தவித கட்சி பேதமும் பாராட்டாமல் நடந்துகொள்ள வலியுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன

இப்படி, எல்லா வகைகளிலும் போதுமான ஒத்துழைப்புடன் தேர்தல் நடைபெறுமானால், அது மிகவும் சட்டரீதியானதாகவும், அமைதியாகவும், நல்லமுறையிலும் அமைந்திருக்கும் என்றும் தாங்கள் நம்புவதாக தேர்தல் குழுவினர் கூறியிருக்கின்றனர்

பொதுத் தேர்தலில் விடுமுறை நாட்கள்

சென்னை, பிப 5—

பொதுத் தேர்தல் நடைபெறும் நாட்களில்—அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதிகளில், கீழ்கண்டபடி விடுமுறை அளிக்கப்படுமென்று சர்க்கார் விடுத்துள்ள குறிப்பொன்றில் கூறப்பட்டிருக்கிறது.

மார்ச் 1:

திருவண்ணாமலை, திருச்செங்கோடு, திண்டிவனம், கும்பகோணம், புதுக்கோட்டை, தென்காசி, பெரியகுளம், பொள்ளாச்சி.

மார்ச் 4:

செங்கற்பட்டு, கிருஷ்ணகிரி பெரம்பலூர், திருவில்லிபுத்தூர், திருச்செந்தூர், கோபிசெட்டிப்பாளையம்.

மார்ச் 6:

திருவள்ளூர், திருப்பத்தூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், நீலகிரி.

மார்ச் 8:

சென்னை வடக்கு—தெற்கு, நாமக்கல் சிதம்பரம், இராமநாதபுரம், திருநெல்வேலி

மார்ச் 11:

வேலூர், நாகப்பட்டினம், கரூர், நாகர்கோவில், மதுரை கோவை,

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் ஒரு பகுதியில் மட்டுமே வாக்கெடுப்பு நடைபெற்றாலும்கூட, அந்த மாவட்டம் முழுமையிலும் விடுமுறைப் பிரகடனம் செய்ய அந்தந்த மாவட்டக் கலெக்டர்களுக்குச் சர்க்கார் அங்கீகாரம் வழங்கியிருக்கிறதாம்.

தொகுதி விளக்கப் படம்

சென்னை, பிப் 5—

டில்லிப் பாராளுமன்றத்திற்கும் சட்ட சபைக்கும் உள்ள தொகுதிகளை விளக்கும் படம் ஒன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளதாம். சென்னை—சேப்பாக்கத்தில் உள்ள மதிய 'சர்வே' அலுவலகத்தில் இப்படம் கிடைக்கும் என்றும், விலை ரூ. 8-2-0 என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சட்டசபை—பாராளுமன்றத் தேர்தல் நிலவரம்

சென்னை மாநில சட்டசபைக்கான மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 205 இதற்கு மாநில மெங்கணுமிருந்து மொத்தம் 1 276 பேர் போட்டியிட அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்தனர்

இவைகளில் 22 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன; 365 பேர், தங்கள் மனுக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்; இறுதியாக இப்போது 889 பேர் போட்டியிடுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் விளவங்கோடு ஆகிய இரு தொகுதிகளில் முறையே நேசமணி, வில்லியம் ஆகியோர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்

எனவே பாக்கியுள்ள 203 இடங்களுக்குத்தான் தேர்தல் நடைபெறும்

இராமநாதபுரம் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் யாரும் போட்டியிடவில்லை; மற்ற 202 இடங்களில் காங்கிரஸ் தனது அபேட்சகர்களை நிறுத்திப் போட்டியிடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் மொத்தம் 117 இடங்களில் போட்டியிடுகின்றனர்.

காங்கிரசுக்கு அடுத்தபடியாக தி. மு கழகம்தான் அதிக இடங்களில் போட்டியிடுகிறது

கம்யூனிஸ்டுக் கட்சி 60 இடங்களில் மட்டுமே போட்டியிடுகிறது.

இவை தவிர, பி சோ. கட்சி 25 இடங்களுக்கும், சீர்திருத்தக் காங்கிரஸ் 55 இடங்களுக்கும், சோஷலிஸ்டுக் கட்சி 8 இடங்களுக்கும், மக்கள் முன்னேற்றக் கட்சி ஒரு இடத்திற்கும், 'பார்வர்ட் பிளாக்' 2 இடங்களிலும் மற்றும் சுயேச்சைகள் 419 பேர்களுமாக மொத்தம் 889 பேர் போட்டியிடுகின்றனர்.

மக்கள் சபை

மக்கள் சபையில் உள்ள சென்னை மாநிலத்திற்கான 41 இடங்களில் போட்டியிட 206 பேர் தங்கள் அபேட்சை மனுக்களை தாக்கல் செய்தனர்.

மனுக்களின் பரிசீலனையின்போது 4 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன; மேற்கொண்டும் 48 பேர் தங்கள் மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர். எனவே மொத்தம் 41 மக்கள் சபை இடங்களுக்கு 154 பேர் போட்டியிடுகின்றனர்.

இந்த 41 இடங்களுக்கும் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது

தி. மு. கழகத்தின் சார்பில் 8 இடங்களில் அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்

கம்யூனிஸ்டுகள் 12 இடங்களிலும், மக்கள் சோஷலிஸ்டுகள் 10 இடங்களிலும், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி 9 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

முன்னையப் பெருமை இழந்தது போதாதா?

நாட்டுக்குத் துரோகமிழைத்தவர்கள் காங்கிரசாரா - கழகத்தவரா?

தென்னகத்து அரசியல் வாழ்வில் புதியதோர் சகாப்தம் உருவாக தி.மு. கழகத்தை ஆதரியுங்கள்

எங்களிடம் பண பலமில்லை—ஆனால் மூதாதையர் பண்பு இருக்கிறது

சென்னை தேர்தல் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் முழக்கம்

சென்னை, பிப். 6—

சென்னை 16-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் நேற்று முன் தினம் சென்னை—அண்ணா பிள்ளைத் தெருவில் நடைபெற்ற பல்லாயிரக்கணக்கான மக்களடங்கிய கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"காந்தியார் வளர்த்த காங்கிரஸ், திருப்பூர் குமரன், வ. உ. சிதம்பரனார், லாலாலஜபதி ராய் போன்ற உத்தமர்களும், தியாகிகளும் வளர்த்த காங்கிரஸ் எங்கே?—இன்று கள்ளமார்க்கெட்காரர்களையும் கொள்ளை இலாபம் அடிக்கும் ஆலை முதலாளிகளையும் தன்னிடம் வைத்துள்ள காங்கிரஸ் எங்கே? காங்கிரஸ் டிக்கெட்டுக்காக டில்லிக்குக் காவடி எடுக்கும் இராசா சர். முத்தையா போன்ற பணக்காரர்களை வைத்திருக்கிற காங்கிரஸ் எங்கே? நாணயமான—கண்ணியம் தவறாத காங்கிரஸ்காரர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், 'நீங்கள் கட்சிகளைக்கூட மறந்துவிடுங்கள்; ஆனால் தமிழுக்காக-தமிழ் நாட்டிற்காக உண்ணாவிரதமிருந்த விருதுநகர் சங்கரலிங்கனாரின் உயிரைக் குடித்த காமராசர் ஆட்சியை நினைத்துப் பாருங்கள்; என்று கேட்கிறேன். அவர்கள் அப்படி நினைத்துப் பார்த்தால்—ஓட்டுச் சாவடிக்குப் போகும்போது ஒரு கணம் எண்ணினால் நிச்சயம், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளிக்க அவர்களுக்கு எண்ணம் வராது!

"எங்களை, 'ஆண்டவனை நம்பாதவர்கள்' என்று கூறுகிறார்கள். ஆனால் அந்த ஆண்டவனே எங்கள் பக்கம் நின்று, எங்களுக்கு உதவி செய்து வருகிறார்! இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்களிடையே சொல்ல விரும்புகிறேன். இன்று தேர்தலில் ஈடுபட்டுள்ள யாவரும் சின்னத்திற்காக சென்னை நகராண்மைக் கழகத்திற்கு வந்திருந்தார்கள். நான் கேட்டிருந்த உதயசூரியன் சின்னத்தை என்தொகுதியில் போட்டியிடும் வேறு ஒரு தோழர் வேண்டுமென்றே தமக்கும் உதயசூரியன் சின்னம் வேண்டும் என்று கேட்டிருந்தாராம். தேர்தல் அதிகாரி எங்களைப் பார்த்து, 'இரண்டு பேரும் ஒரே சின்னத்தைக் கேட்டால் நான் யாருக்குத் தருவேன்?' என்றார். அங்குக் கூடியிருந்த மற்றக் கட்சித் தோழர்கள்கூட வருத்தப்பட்டனர்; இறுதியாக, அவ்வதிகாரியும் 'குலுக்குச் சீட்டுப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை; சீட்டுக் குலுக்கிப் போடுகிறேன்—யாருக்குச் சின்னம் வருகிறதோ அப்படித்தான் கொடுக்கப்படும்' என்றார்.

"பொறுமை எண்ணங் கொண்ட மாற்றுக் கட்சியினர், இதைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள்; அவர்கள், ஆண்டவனை யெல்லாம் வேண்டியிருப்பார்கள்—'இவனுக்கு இந்தச் சின்னம் விழக்கூடாது'—என்று! ஆனால் முடிவில் சீட்டுக் குலுக்கிப் போட்டதில் எனக்கே உதயசூரியன் சின்னம் கிடைத்தது; கூடியிருந்தவர்களெல்லாம் மகிழ்ச்சியால் என்னைப் பாராட்டினார்கள்.

"இவைகளை நான் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம்; 'இவர்கள் கடவுளுக்கு விரோதிகள்' என்கிறார்கள் மாற்றார்; ஆனால், 'காலால் நடந்து வாடா கந்தப்பா' என்று பக்தர்கள் வேண்டியும்கூட வராத கடவுள், எனக்காக ஓடோடியும் வந்து உதவி செய்தார் என்பதைச் சுட்டிக் காட்டத்தான்!

"இதைக் கண்டதும், சூழ்ச்சிக்காரர்கள் வயிறெரிந்துபோனார்கள். இப்படி ஓட்டுப் பெறத் தில்லுமுல்லுகள் செய்யும் ஈனத்தனமான வாகளை இன்று காங்கிரஸ் கூடாரத்திலே நாம் காண்கிறோம்.

"தமிழ்நாக்க முன்வந்த தாளமுத்து, நடராசன் உயிர்களைக் குடித்திருக்கிறது, இந்த காங்கிரஸ்! தமிழ் நாடு எனப் பெயரிடக்கோரி உண்ணாவிரதமிருந்த சங்கரலிங்கனார் உயிரைக் குடித்திருக்கிறது இந்தக் காங்கிரஸ்!

"தமிழைக் காட்டிக்கொடுத்த துரோகிக் கும்பல் இன்று காங்கிரசிலே உள்ளது. இந்தப் பகுதி மக்களை நான் கேட்டுக்கொள்வேன்— இந்தத் தொகுதியில் போட்டியிடும் என்னையும், காங்கிரஸ் தோழரையும் ஒரே மேடையில் நிறுத்தி, எங்களில் யார் தமிழ்நாட்டிற்குத் துரோகமிழைத்தவர்கள்' தாளமுத்து, நடராசன் உயிர்களைக் குடிப்பதற்குத் துணை நின்ற துரோகிகள் யார்— என்று பொதுமக்களாகிய நீங்களே தீர்ப்பளியுங்கள்!

"நானும்கூடத்தான் காங்கிரசிலே காரியதரிசியாகப் பணியாற்றி இருக்கிறேன். தாய் மொழியாம் தமிழைக் குழிதோண்டிப் புதைக்க, காங்கிரஸ் இந்தியைக் கொண்டு வருகிறதென்றபோது நான் காங்கிரசிலிருந்தபோது, யேறினேன். அதைக் கண்ட காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்கள் என்னை ஒரு தனி அறையில் வரவழைத்து, நீ ஒரு நல்ல தொண்டன்; கட்சிக்காகப் பாடுபடும் சிறந்த உழைப்பாளி; உன்னை இழக்க நான் விரும்பவில்லை; போகட்டும்—நீ காங்கிரசை எதிர்த்ததற்காக மன்னித்துவிடுகிறேன்; இனி யாவது திருந்திவிடு' என்றார்!

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டின்முன்னேற்றத்திற்கு தி.மு.க. கொள்கைகள்தான் அஸ்திவாரம்!

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கொள்கை விளக்கம்

'தொழிலாளர் பிரச்சினையும் தி. மு கழகமும்' என்ற தலைப்பில் தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி அவர்கள், சென்னையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது; எஞ்சிய பகுதி இங்கு தரப்படுகிறது:—

"பார்ப்பனர் ஒருவர் முதலாளியாக இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால், அவருக்குக் கீழே வேலைசெய்யும் ஒரு பார்ப்பனரல்லாத தொழிலாளி, துணிவாகச் சென்று கூலிகேட்க முடிகிறதா? அந்த முதலாளி அவனை, 'அடே' என்று கூப்பிடுவார்; இவன், 'என் சாமி?' என்று பதில் தருவான்; இப்படிப்பட்ட நிலைமை நீடிக்கும்வரையில், தொழிலாளியிடம் பணம் சேர்ந்துவிட்டால் மட்டும் சமுதாய அமைப்பு முறை மாறிவிடாது.

"முதலாளியின் மகன் 14 வயதுப் பையனாக இருப்பான்; 40 வயது வேலைக்காரனைப்பார்த்து 'அடே கந்தா, கடைக்குப்போய் ட வாங்கி வா!' என்று சொல்லுவான். அதையும் தாங்கிக்கொள்வான் தொழிலாளி. ஏன்? அவனுடைய கஷ்டம். அவனை வேலையை விட்டு நீக்கிவிட்டால் அவனுக்கு வாழ வழியில்லை. இப்படி முதலாளி, பணத்தைக் கொடுக்கிறான்; எனவே 'அடே' என்று அழைக்கிறான்!

"கிராமங்களில் வயலோரத்தில் நின்றுகொண்டிருக்கும் ஐயர், அந்த வழியே வருகிறவனைப்பார்த்துக் கேட்பார் 'அடே' குப்பா—என்பார்; இவனும் 'என்ன சாமி என்பான். இந்த இரண்டையும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"முதலாளியிடம் வேலை செய்யும் தொழிலாளி, அந்த வேலையை விட்டு விலகின பிறகு அந்த முதலாளியை மதிப்பதில்லை; ஏன்? அந்த முதலாளி தன்னைவிட ஒன்றும் உயர்ந்தவனில்லை என்ற உணர்ச்சி அப்பொழுது அவனுக்கு உண்டாகிவிட்டிருக்கிறது. இப்படி, முதலாளி சம்பளத்தைக் கொடுத்துத் தொழிலாளியை 'அடே' என்று கூப்பிடுகிறான்; அப்போது தொழிலாளிக்கு உணர்வு இல்லை; சம்பளம் தின்ற பின்னர் தொழிலாளிக்கு உணர்வு ஏற்படுகிறது. ஆனால், இரண்டாவதாக எடுத்துக் காட்டிய உதாரணத்தில், வயலோரத்தில் நிற்கும் ஐயரும் இவனைப் பார்த்து 'அடே' என்றுதான் கூறுகிறார்; ஆனால் அதற்குச் சம்பளம் கொடுக்கவில்லை. முதலாளி சம்பளத்தை நிறுத்திக்கொண்டதும் விழிப்புணர்ச்சி பெறுகிற தொழிலாளிக்கு இப்போது மட்டும் உணர்ச்சி ஏற்பட மறுக்கிறது—ஏன்?

"இப்படிப்பட்ட உணர்ச்சி இன்று நாட்டில் பரவி வருகிறது என்றால்—மனிதனுக்கு மனிதன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் இல்லை என்கிற ஒரு சமத்துவ உணர்வு பரவி வருகிறதென்றால், அந்த சமத்துவ உணர்ச்சியைத் தூண்டினது யார்? தி. மு. கழகத்தினரா, அல்லது கம்யூனிஸ்டுகளா, காங்கிரசாரா? எனவே, கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் எப்படி ஆசிரியர்கள் அஸ்திவாரங்களோ, அது போலத்தான் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமாக தி. மு. கழகத்தினர் நடவடிக்கைகள் இருக்கின்றன.

"தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறோம்—அவர்களுக்காகச் சங்கங்கள் வைத்திருக்கிறோம்—அவர்களுடைய பசியை போக்க பாடுபடுகிறோம்என்று கூறிக்கொள்ளும்கம்யூனிஸ்டு நண்பர்கள், பிச்சைக்காரர்களுக்காகவும் சங்கங்கள் அமைத்துகொள்வதுதானே? ஏன் செய்யவில்லை? 'பிச்சைக்காரன் சந்தா கொடுக்கமாட்டான்; அவனுக்கு ஓட்டுரிமையும் கிடையாது,' என்பதுதான் காரணமா?

"கல்லக்குடி போராட்டம் கஞ்சி கொடுக்குமா—என்று கேட்கிறார்கள். நாம் ஏன் கல்லக்குடி போராட்டத்தை நடத்தினோம்? இந்த நாட்டுச் செல்வத்தை வடநாட்டுக்காரன் சுரண்டுகிறானே—அதைத் தடுக்கவேண்டாமா என்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டுவதற்காக 'ஆலயம் பதினாயிரம் கட்டிப் பயனில்லை; அன்னசத்திரம் ஆயிரம் கட்டிப் பயனில்லை; ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தால் அவனுக்கு அவனே சாப்பாட்டுக்கு வழி செய்வான்; தனது சொந்தக் காலாலேயே நடப்பான்,' என்று பாரதியார் கூறியிருக்கிறார்; அதை மறந்துவிட்டார்கள்—பாரதியைத் தலைமேல் தூக்கிவைத்தாடும் கம்யூனிஸ்டுகள்!

"நாம் தேர்தலில் போட்டியிடுவது பதவி ஆசையினால் அல்ல; பதவிப் பித்தர்களைப் பதவியிலிருந்து அகற்றுவதற்குத்தான் நாம் போட்டியிடுகிறோம். அதே நேரத்தில், 'சட்டசபை போய்விட்டால் மட்டும் திராவிட நாடு கிடைத்துவிடுமா' என்று கேட்கின்றனர் சில தோழர்கள். அவர்களுக்கு நாம் சொல்வதெல்லாம், நமது சட்டசபை நுழைவு நமது குறிக்கோளை அடைவதற்கு மேற்கொள்ளும் ஒரு திட்டம்என்பதே!"

வாக்காளர் சிந்தனைக்கு!

V

இவர்கள் எல்லாம் யார்?	இவைகள் எல்லாம் எங்கே?
புல்கானின்	ரூர்கேலா
குருஷ்சேவ்	பிலாய்
தேஷ்முக்	துர்காபூர்
அனுமந்தையா	சிந்திரி
அம்புஜம்மாள்	சித்தரஞ்சன்
பி. பி. நாயர்	பிம்பிரி
ஏ, எம். தாமஸ், எம்.பி,	பக்ரா
அனந்தராமகிருஷ்ணன்	நங்கல்
சர் சி. பி. இராமசாமி அய்யர்	ஹிராகுட்
டி. எஸ். இராஜம்	தாமோதர்
ஸ்ரீ கண்டன் நாயர்	கோசி
முகம்மது இஸ்மாயில்	கொய்னா
சி. சுப்பிரமணியம்	போபால்
முகம்மது இமாம்	அம்பர்நாத்
இவர்கள் தி. மு. கழகத்தினரா?	இவைகள் தென்னாட்டிலா?
இல்லை!	இல்லை!

V

இவர்களுக்கும்..............இவைகளுக்கும்

என்ன தொடர்பு?

நாளை!

பண்பாட்டு அருமை மறந்தது காணாதா?

இலங்கையில் தமிழர் ஒருவர் சுட்டுக் கொலை!

'சுதந்திர தின'த்தன்று தமிழ்ப் பகுதியில் 'துக்கதினம்'

கொழும்பு, பிப் 4—

தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் இன்னல்களையும் கொடுமைகளையும் இழைத்துவரும் இலங்கை சர்க்காரின் 9-வது ஆண்டு சுதந்திரதின விழாவின்போது, இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள தமிழர்கள் அனைவரும், தங்கள் தங்கள் இல்லங்களில் கருப்புக் கொடிகளை ஏற்றி 'துக்க தினம்' கொண்டாடியிருக்கின்றனர்.

கொழும்பு நகரை அடுத்த வெள்ளவத்தையில், சுமார் 50 தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடி உண்ணா நோன்பு மேற்கொண்டு தங்கள் எதிர்ப்பையும், துக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சுதந்திர விழாவையொட்டி சர்க்கார், எல்லா நிறுவனங்களுக்கும் விடுமுறை அளித்தது; ஆனால் இந்த முறைச் சட்டத்தைமீறி, வணிக நிறுவனங்கள் அனைத்தையும் திறந்து வைக்குமாறு தமிழர் காங்கிரஸ் கேட்டுக்கொண்டது.

இந்த வேண்டுகோளையொட்டி திறந்து வைக்கப்பட்டிருந்த கடைகளை மூடுமாறு கோரி, இலங்கைப் பெடரல் கட்சியினர் மறியல் செய்திருக்கின்றனர்; இதன் விளைவாகச் சில இடங்களில் இருதரப்பாருக்குமிடையே கை கலப்பு ஏற்பட்டதாகவும், சிற்சில இடங்களில் போலீஸ் தடியடிப்பிரயோகம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

திரிகோணமலையில் தமிழர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

திரிகோணமலையிலுள்ள சந்தைக்கருகில் ஒரு கோபுரத்தில் பறக்கவிடப்பட்ட இலங்கை தேசியக் கொடியை இறக்கி, அதற்குப் பதில் கருப்புக்கொடி ஏற்றத் தமிழர்கள் முயற்சித்தபோது ஒரு தமிழர் யாரோ ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற செய்தியும் தரப்படுகிறது.

தமிழரைச் சுட்டுக் கொன்றவர் யார் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

தொகுதிக் குழுக் கூட்டங்கள்

7-2-57 இரவு 8 மணிக்கு கீழ்ப்பாக்கம் தியாகப்பமுதலி தெரு 40 பி எண்ணுள்ள கட்டிடத்தில் ஆயிரம் விளக்குத் தொகுதி 22-வது வட்ட தேர்தல் வட்டக் குழு அமைப்புக்கூட்டம் நடைபெறும். கழகத் தோழர்கள் கழகச் சார்புடைய மன்றங்கள் ஆதரவாளர்கள் அனைவரும் வர வேண்டப்படுகின்றனர்.

* * *

8-2-57 மாலை 6 மணிக்கு சென்னை மீனாட்சியம்மன் பேட்டை வடசென்னை தான முத்து நடராசன் முன்னேற்ற மன்றத் தி மு. கழகத் தேர்தல் செயற்குழுக் கூட்டம், வைகுண்ட நாடார் தெரு, எண் 7 தோழர் எம். கே. சாமி இல்லத்தில் நடைபெறும்.

தேர்தல் குழு அமைப்புக் கூட்டம்

8—2—57 இரவு 9 மணிக்கு சென்னை—திருவல்லிக்கேணி ஐரோடு, எண் 379 மனையில், 42-வது வட்டத் தி மு. கழகத் தேர்தல்குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும் வட்டக் கழக உறுப்பினர்கள், கழக சார்புடைய மன்றங்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மின்சார விநியோக நிலையங்கள்

தேசியமயமாக்குவதற்கு டில்லி தடை

மின்சார விநியோக நிலையங்களை தேசியமயமாக்கும் நடவடிக்கையை ஆர அமரச் செய்யுமாறும், அவசர அவசரமாக மேற்கொள்ளக்கூடாது என்றும் டில்லி சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு யோசனை கூறியிருக்கிறதாம்!

ஆனால், தென் ஆர்க்காடு மின்சார விநியோக நிறுவனத்தை தேசவுடமையாக்குவது என்ற சென்னை சர்க்காரின் முடிவு இதனால் பாதிக்கப்படாது என்றும், சென்னை உத்தேசித்திருந்த வேறு சில இது போன்ற நடவடிக்கைகள்தான மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் கூறப்படுகிறது.

காஞ்சி தொகுதியில் அண்ணா

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

பிப்ரவரி

7 : மாலை—காஞ்சீபுரம், புத்தேரித் தெரு
8 : மாலை—காஞ்சீபுரம், கங்கைகொண்டான் மண்டபம்.
9 : மாலை 6-மணி—காஞ்சிபுரம் காளியம்மன் கோவில் தெரு (அரங்கசாமி நினைவு மன்றம்)
" இரவு 10-மணி—காஞ்சிபுரம் கரிக்கினில் அமர்ந்தவன் கோயில் தெரு
11 : மாலை — சின்ன காஞ்சிபுரம், திருச்சேரலைத் தெரு, திருவள்ளுவர் கழகம்.
17 : இரவு—பரந்தூர் கிராமம் (நாடகத் தலைமை)
(10-2-57 சென்னை சிறப்பு மாநாடு)

சென்னை—வண்ணைத் தொகுதி தோழர்கட்கு:

3—2—57-ல் நடைபெற்ற தொகுதிக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்தபடி, சென்னை—வண்ணைத் தொகுதியைச் சேர்ந்த 4 வட்டங்களிலும் உள்ள கழகத் தோழர்களின் இல்லங்கள், மன்றங்களில் கழகக் கொடியேற்ற வேண்டியிருப்பதால், கொடியேற்று விழா வாரவலத்திற்கு முன்னதாகவே, தங்கள் தங்கள் இல்லங்களில் கொடியேற்றச் சம்மதம் தரும் தோழர்கள் 12—2—57-க்குள், வண்ணைத் தொகுதி மத்திய தேர்தல் (தி மு க.) அலுவலகத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

10—2—57 மாலை 6 மணிக்கு, ஸ்ரீவைகுண்டம் தி மு கழகச் சார்பில் தி மு. கழகத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் தோழர் எஸ் கணபதிபாண்டியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். சிவசாமி, எம். அன்பரசு, ஜி. பி. வெண்மதியன், இல. அறவேந்தன் ஆகியோர் பேசுவர்.

என். வி. நடராசன் சொற்பொழிவு—3-ம் பக்கத் தொடர்ச்சி

'நாடாண்டோர் இழைத்துள்ள கொடுமைகளைக் களைந்தெறிவோம்'

"ஆனால் நான் அவருக்குப் பதில் கூறினேன்—'தாய் மொழியை காட்டிக்கொடுத்துவிட்டு, பதவிக்காக வாழமாட்டேன்! எனக்குப் பதவி பெரிதல்ல—தாய் மொழியே பெரிது!' என்றேன். அதற்கவர், 'நீ என்ன, என்னிடமே பாடம் காட்டுகிறாய்? நீ உருப்படப்போவதில்லை, போ!' என்றார்! அன்றிலிருந்து இன்று வரை, தமிழுக்காக—தமிழ் நாட்டிற்காகப் பாடுபட்டு வருகிறேன்.

"நானும் அண்ணா அவர்களும் நண்பர்களாக இருந்தபோது, 1939-ம் ஆண்டில் சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டையில் அண்ணா அவர்கள் காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் நின்றார்கள். அப்போது அண்ணா அவர்கள் என் நண்பர் ஆனபோதிலும், எனது கொள்கைக்காகவே அண்ணாவை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தேன். அண்ணா அவர்கள்கூட என்னைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டிப் பேசினார்—'நீ கொள்கைக்காகவே—கொள்கையே பெரிதென்று, என்னை நண்பன் என்றுகூட எதிர்த்துப் பிரச்சாரம் செய்தாய்; உனது அரசியல் கண்ணியத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் நீ இதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்—என்றைக்காவது என்னுடன் நீ வரத்தான்போகிறாய்' என்று ஜாடையாக ஆருடம் கூறுவது போலப் பேசினார்.

"அப்படிப்பட்ட நான் கொண்ட கொள்கையே பெரிதென எண்ணி இதுவரையில் வாழ்ந்து வந்திருக்கிறேன். கொள்கை—இலட்சியம் பெரிதென்றுதான் நாங்கள் வாழ்கிறோமே தவிர, எங்களுக்குப் பதவி பெரிது அல்ல!

'தேர்தலில் போட்டியிடும் எங்களிடம் பணமூட்டையா இருக்கிறது? இரும்புப் பெட்டியா இருக்கிறது?

'நாங்கள் தேர்தல் சுவரொட்டிகள் போட்டோம்; அதற்கு அண்ணா அவர்களுக்கு செலவான நேரம் 7 இரவுகள்! நாங்கள் அண்ணாவிடம் வசவு வாங்கிக்கொள்ள 4 இரவுகள்! போஸ்டருக்கான செலவு ரூ. 20,000! எல்லாம் பொதுமக்களாகிய நீங்கள் மனமுவந்து கொடுத்த பணம்!

'எனவே நாங்கள் பண பலத்தை வைத்துத் தேர்தலில் நிற்கவில்லை! ஆனால், எங்களிடத்திலே மூதாதையரின் பண்பு இருக்கிறது; மக்கள் வாழ்வுக்காகப் போராடும் ஆற்றலும் அவர்களுடைய நல்வாழ்வுக்குப் பணிபுரியும் மனவளமும் இருக்கிறது, எங்களிடம்! அதைக் கொண்டே நாங்கள் தேர்தலில் நிற்கிறோம். தேர்தலில் நிற்கின்ற நானும் மற்றக் கழக அபேட்சகர்களும், பணம் கொடுத்து ஓட்டுப் பெறமாட்டோம்; ஆனால் உங்களிடத்திலேயே பணமும் ஓட்டும்—இரண்டையும் கேட்கிறோம்!

"எங்களைத் தாக்கிப் பேசும் மாற்றுக் கட்சிக்காரர்களை நாங்கள் திருப்பித் தாக்கிப்பேசமாட்டோம்; மாற்றாரைக் குறை கூறித் திரியமாட்டோம். ஏனெனில், எங்கள் தலைவர்கள் எங்களுக்கு இட்ட கட்டளை அது!

"இந்தப் பகுதியிலுள்ள தாய்மார்களும் பெரியோர்களும், எனக்குக் காட்டிய இந்த ஆதரவு என்னைப் பூரிப்படையச் செய்கிறது. நீங்கள் எல்லாம் உங்களின் நல்ல ஒத்துழைப்பைத் தந்து என்னை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்; தென்னகத்து—தமிழகத்து அரசியல் வாழ்விலே புதிய தோர் சகாப்தத்தை ஏற்படுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகிய எங்களை ஆதரியுங்கள்; மக்களின் நல்வாழ்வு ஒன்றேதான் தி. மு. கழகத்தின் இலட்சியம்! எனவே, அந்த இலட்சியக் கொள்கைக்கு உங்களுடைய மேலான ஆதரவைத் தந்து, கழகத்தை வெற்றி பெறச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்."

★

5-வது வட்டத்தில்...

4-2-57 மாலை 6 மணியளவில் சென்னை — கொருக்குப்பேட்டையில் நடைபெற்ற தி மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், அத்தொகுதி தி. மு. கழக அபேட்சகரான துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"தி. மு. கழகத்திடம் பணமில்லை; ஆனால் மூதாதையர் பண்பு கொண்டிருக்கின்ற தி. மு. கழகம் மாற்றுக் கட்சியினரின் ஆருடங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏனென்றால், கழகத்தைப் பற்றி—அதனுடைய கொள்கையைப்பற்றி—அது மக்களுக்குச் செய்துள்ள சேவைகளைப் பற்றித் தீர்ப்பளிக்க வேண்டியவர்கள் பொதுமக்கள்தான்.

"தி. மு. கழகம் ஏறத்தாழ இன்று 120 இடங்களில் தன்னுடைய அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது; பேசின் பிரிட்ஜ் தொகுதியில் கழகம் என்னை நிறுத்தியிருக்கிறது. கழகச் சார்பில் நிற்கும் எங்களைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை; ஏனெனில், தி. மு. கழகத்தைப் பற்றியும், அதனுடைய தொண்டர்களைப் பற்றியும் மக்களே நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் தொண்டன்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி ஏழை, நடுத்தர மக்களின் வெற்றி—பாட்டாளிகள், தாழ்த்தப்பட்டோர் அடையும் வெற்றி கடந்த 9 ஆண்டுக் காலமாக ஏழை மக்களின்—பாட்டாளி, நடுத்தர, தாழ்த்தப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் எல்லாம் கழகம் கருத்துச் செலுத்தி வந்திருக்கிறது

'இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகி, அவர்களுக்கு நலவாழ்வு தருவதற்கான முயற்சியில் வெற்றி பெறத்தான் தி. மு கழகம் இன்று தேர்தலில் ஈடுபடுகிறது. எனவே, மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் முதல் கட்டத்தில் தி. மு. கழகம் நின்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மக்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்வதெல்லாம், 'தி. மு. கழகத்தைச் சட்டசபைக்கு அனுப்புங்கள்; எங்களுடைய கொள்கையிலே சொத்தை சொள்ளை ஏதேனும் உண்டா என்று அலசிப் பாருங்கள்; நாங்கள் சொன்ன சொல் தவறியவர்களா என்பதை எங்கள் கடந்த கால நடவடிக்கைகளை நினைத்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள்; யாருக்காவது துரோகம் செய்தோமா என்று நினைத்துப் பாருங்கள்; உங்கள் நலனுக்காகவே இன்றுவரை பாடுபட்டு வரும் தி. மு. கழகத்தை ஆதரியுங்கள்' என்பதுதான்.

"இந்த நேரத்தில நான், என் சார்பாக மட்டுமல்லாமல்; கழகத்தின் சார்பாகவும் உறுதி கூறிக்கொள்வேன்; இவ்வளவு நாட்களாக ஆட்சிபீடத்திலமர்ந்திருந்த காங்கிரஸ் மக்களுக்கு என்னென்ன கொடுமைகளையெல்லாம் செய்தனரோ அவைகளையெல்லாம், எங்களைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினால் ஓராண்டிற்குள்ளாகவே ஒழித்துக்கட்டுவோம். இன்று நாங்கள் கூறுகின்ற உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிட்டால், பிறகு எங்களைவந்து கேளுங்கள்—ஏன் செய்யவில்லை' என்று! நாங்கள் எங்கும் ஓடிவிடுபவர்கள் அல்ல; என்றுமே—எப்போதுமே—மக்களை வீதியோரங்களிலே சந்திப்பவர்கள்தான் தி. மு. கழகத்தினர்.

"வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் தபால் கார்டுக்கு அரையணா கட்டணம் விதித்தனர்; அப்போது வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட காங்கிரசார் என்ன சொன்னார்கள்? 'கார்டு விலையை குறைப்போம்—இரயில்வே கட்டணத்தைக் குறைப்போம்' என்றெல்லாம் கூறினார்களே ஆனால் இப்போது நிலைமை என்ன? அந்த வெள்ளையனின் ஆட்சியாவது ½ அணாவிற்குத் தபால் கார்டை விற்றது; ஆனால் இந்தப் 'பரம யோகியர்களை' அதை ¾ அணாவாக உயர்த்திவிட்டார்கள்; 1½ அணாவாக விற்கக் கவரை 2 அணாவாக்கிவிட்டார்கள்; மைலுக்குக் காலணா என்றிருந்த இரயில் கட்டணத்தை ½ அணாவாக உயர்த்திவிட்டார்கள். இப்படி இவர்கள் கட்டணங்களை அதிகரித்ததுதான் செய்தார்களே; ஒழுங்கான முறையிலாவது நிர்வாகம் நடைபெறுகிறதா? இப்போது எவராவது இரயிலில் போவதே உயிருக்கு ஆபத்தாக இருக்கிறதே? இவைகளெல்லாம் சிந்தித்துப் பாருங்கள் என்று தி மு கழகம் மக்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

"தி.மு. கழகத்தை எதிர்த்து நிற்பவர்கள் பற்றி மக்கள் கவலைப்பட வேண்டாம்; நம்முடைய கொள்கைகளின் வரவு-செலவு என்ன—மாற்றாரின் கொள்கைகளின் வரவு-செலவு என்ன என்பதைமட்டும் நாம் எடுத்துக்கூறுவோம். நம்மை மாற்றார் திட்டுவார்கள்—என்றாலும் தாங்கிக்கொள்வோம்; நம்மை ஏசுவார்கள்—என்றாலும் பொறுத்துக்கொள்வோம்; அடித்தால்கூட நாம் ஏற்றுக்கொள்வோம்; ஏனென்றால் தீர்ப்புக்கூறவேண்டியவர்கள் அவர்களல்ல; பொது மக்களாகிய நீங்கள்தான்."

செத்துப் போய்விட்டது!

"காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பிரச்சினை செத்துப் போய்விட்டது; காஷ்மீரில் ஐ நா. படை நிறுத்தப்படுவதை ஒரு நாளும் அனுமதியோம்"

என்று, டில்லி சர்க்கார் முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

9—2—1957 (வெளியூர் 10—2—1957) 'நம் நாடு' இதழில் தி. மு. கழக அபேட்சர்கள், கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களின் முழுப் பட்டியலும் வெளியிடப்பட இருப்பதால் அதிகப் பிரதிகள் வேண்டுவோர் உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

இழந்த நம் உரிமையைப் பெற எழுவீர்!